## உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்பு நிதியம் - 2017

---

உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்பு நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளிளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்பு நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கை

நிதிக்கூற்றுக்களை தயாரிக்கையிலும் சமர்ப்பிக்கையிலும் கடைப்பிடிக்க வேண்டிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்படவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

மீளாய்வாண்டின் போது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பதவியணியினர்களுக்கு ஊக்குவிப்புப் படிக் கொடுப்பனவிற்கு திறைசேரியால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 619,500,000 மற்றும் ஊக்குவிப்பு மற்றும் நலன்புரிச் செலவினங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 641,728,651 கூட்டுத்தொகையான செலவினம் நிதியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அக் கொடுக்கல் வாங்கல்கள் ஊக்குவிப்பு கொடுப்பனவிற்காக பொது வைப்புக் கணக்குகள் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 2.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ்/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 4.3 ஆம் பிரிவு | கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஆ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 210(4) ஆம் பிரிவு | நிதியத்தின் நிர்வாகத்திற்காக செயல் நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி நிதிவிளைவுகள் ரூபா 1,070,639 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,017,117 ஆனமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 53,522 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக வட்டி பெறுவனவுகள் ரூபா 50,877 ஆல் அதிகரித்தமை மேற்படி நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 210(1) ஆம் பிரிவின் கீழ் உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்பு நிதியம் தாபிக்கப்பட்டிருந்ததுடன் அதிகாரச் சட்டத்தின் 210(3) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட உத்தேசத் திட்டத்தின் பிரகாரம் உத்தியோகத்தர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காகவும் ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்காகவும் நிதியத்தைப் பயன்படுத்துதல் நிதியத்தின் பிரதான செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) உத்தியோகத்தர்களுக்காக ஊக்குவிப்புப் படிக் கொடுப்பனவிற்கு திறைசேரியால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த அதிகாரச் சட்டத்தின் 210(2) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டு நிதியத்தின் ஊடாக அச்செயற்பாடுகள் செயற்படுத்தப்பட வேண்டும். அதற்கு இணங்காத வகையில் ஊக்குவிப்பு கொடுப்பனவு திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்குகள் மூலம் மேற்கொள்ளப்பட்டமையால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படாதிருந்ததுடன், நிதியம் செயலற்ற நிலைமையில் காணப்பட்டது.

(ii) நிதியத்திற்கு திறைசேரியினால் அவ்வப்போது வழங்கப்பட்ட பணம் அடமான மற்றும் முதலீட்டு வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு உத்தியோகத்தர்களுக்கு வீடமைப்புக் கடன் வழங்கும் நோக்கில் வீடமைப்புக் கடன் நிதியமொன்று உருவாக்கப்பட்டிருந்ததுடன், வைப்புப் பணம் மற்றும் அந்தப் பணத்தை முதலீடு செய்வதன் மூலம் வருடாந்தம் உழைக்கக்கூடியதாக இருந்த வட்டியினை உள்ளடக்கி 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீடமைப்பு நிதியத்தின் திரண்ட மீதி ரூபா 34,168,567 ஆக இருந்தது. எனினும் மீளாய்வாண்டிலும் முன்னைய 05 ஆண்டு காலப்பகுதியில் எவ்வித கடன் தொகையும் வழங்கப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக ஊக்குவிப்பு நிதியத்திற்காக பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வப்போது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | நிதியத்தின் வருமானங்களையும் செலவினங்களையும் முறையாக கணக்கீடு செய்யும் நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நிதிய முகாமைத்துவம் | அடமான மற்றும் முதலீட்டு வங்கியில் பேணப்பட்டுச் செல்லப்படுகின்ற வைப்புக்களைப் பயன்படுத்தி சுழற்சி கடன் நிதியம் அமுல்படுத்தப்பட்டிராமை. |